06.10.2023
O.S.No.254/2009

பி.வா.சா.1.திரு.சேதுபதி ராஜா த.பெ. சேதுபதி

சாட்சி இன்று அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

**13ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

1. 12ம் பிரதிவாதி கிரையம் வாங்கிய சொத்து சம்பந்தபட்ட விவரங்கள் அனைத்தும் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். 12 மற்றும் 13 பிரதிவாதிகள் கிரையம் வாங்கிய சொத்துக்கள் ஆதியில் இ.ம.கோபாலகிருஷ்ண கோன் டிரஸ்டுக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். தாவா சொத்து உள்பட பிற சொத்துக்களையும் சேர்த்து இ.ம.கோபாலகிருஷ்ண கோன் டிரஸ்டுக்கு பாத்தியப்படுத்தி எழுதி வைத்துள்ளார் என்றால் சரிதான். இ.எம்.ஜி.சௌந்தராஜன் என்பவர் இ.ம.கோபாலகிருஷ்ண கோனின் சுவீகார மகன் என்றால் சரிதான். மேற்படி சௌந்திரராஜன் என்பவர் மேற்படி டிரஸ்டு சொத்துக்களை விற்பனை செய்வதற்கு மதுரை மாவட்ட நீதிமன்றத்தில் அசல் மனு எண்.117/81 என்ற மனுவை தாக்கல் செய்து, முன் அனுமதி பெற்றுள்ளார் என்றால் சரிதான். அந்த அனுமதியானது 18.11.1981 அன்று வழங்கப்பட்டுள்ளது என்றால் எனக்கு தேதி தெரியாது, ஆனால் அனுமதி வழங்கப்பட்டது தெரியும்.

2. 12, 13 பிரதிவாதிகள் கிரையம் வாங்கிய சொத்துக்கள் மேற்படி மாவட்ட நீதிமன்ற அனுமதியில் கட்டுப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதன்படி இந்த வழக்கின் 12ம் பிரதிவாதி சர்வே எண்.158/1 பகுதியில் 90 செண்டு கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரிதான். அதே போல் அதே சர்வே எண்ணில் 13ம் பிரதிவாதி 45 செண்டு நிலமும் அவரது சகோதரர் சந்திவீரன் 45 செண்டு நிலமும் கிரையம் பெற்றுள்ளனர் என்றால் சரிதான். அதே போல் 12, 13 பிரதிவாதிகள் அவர்கள் கிரையம் பெற்ற நிலத்தை பொறுத்து தனித்தனியாக பட்டா பெற்று அனுபவத்தில் உள்ளனர் என்றால் சரிதான். மேற்சொன்ன 1 ஏக்கர் 80 செண்டு நிலமும், முள்வேலி அமைத்து 12, 13 பிரதிவாதிகளின் அனுபவத்தில் தான் தற்போது வரை இருந்து வருகிறது என்றால் சரிதான், முள்வேலி அகற்றப்பட்டு விட்டது, ஊன்றப்பட்ட கற்கள் மட்டும்தான் தற்போது உள்ளது. யாரால் முள்வேலி அகற்றப்பட்டது என்றால் நாங்கள் மானா மதுரையில் குடியிருந்து வருவதால் யார் அகற்றினார்கள் என்று எனக்கு தெரியவில்லை. சொத்தின் சுவாதீனம் 12, 13 பிரதிவாதிகளிடம் தான் உள்ளது என்றால் சரிதான். ஆகையால் தாவா சொத்து வாதிகள் தாக்கல் செய்துள்ள வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரிதான்.